பக்கங்கள்:-16

காலை முரசு

## 2028 இலும் நாமே ஆட்சியமைப்போம்

**சபையில் அநுர வீர சபதம்**

“வரும் 2028 ஆம் ஆண்டிலும் எம்முடைய அரசே ஆட்சியமைக்கும்.” – என்று ஜனாதிபதி அநுரகுமார

05



முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 04 | வியாழக்கிழமை | 19.12.2024 | அதிர்வு 139




# மாவையின் தலைமையை தக்கவைப்பதற்கு வழக்கு

## யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து இராஜிநாமாச் செய்வதாகத் தெரிவித்து மாவை சேனாதிராஜா அனுப்பிய கடிதத்தை கட்சியின் பொதுச்செயலாளர் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்திருக்கும் நிலையில், அந்தக் கடிதம் ஏற்றுக் கொள்ளப்படுவதைத் தடை செய்யுமாறு கோரி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

06

## அர்ச்சுனாவின் உரையை ஹன்சாட் பதிவிலிருந்து உடனே நீக்கிய சபாநாயகர்



நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா யாழ். போதனா வைத்தியசாலை தொண்டர் அடிப்படையிலான ஊழியர்கள் தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து சபைக்கு முரணான வகையிலும்,

05

## 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி வைத்தியர் சத்தியமூர்த்தி வழக்கு

**அவதூறான கருத்துக்கள் தெரிவிக்கக்கூடாது என அர்ச்சுனா எம்.பிக்கு இடைக்காலத் தடை உத்தரவு**



நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி நேற்று அவதூறு வழக்கொன்றை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில்

06



நாட்டின் மக்கள் அனைவரும் ‘இலங்கையர்’ என்ற பொதுவான அடையாளத்தோடு முன்னிறுத்தப்பட வேண்டுமே தவிர, சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் அல்ல எனவும், அவர்களை இன வாரியாக அடையாளப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், கட்சிகள் இனரீதியான அடிப்படையில் அமையக்கூடாது என்ற சாரப்படவும் நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றப்பட்ட உரைக்கு தகுந்த பதிலடி கொடுத்திருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதல் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக பௌத்த – சிங்களப் பேரினவாத மேலாதிக்கம் மேற்கொண்ட இனவாத நடவடிக்கைகளே சிறுபான்மை இனங்கள் தங்களுடைய இனங்களின் பெயர்களில் தங்களை பாதுகாத்து தக்க வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு

05





# வடக்கில் சில அரச அதிகாரிகளுக்கு ஏழைகளின் குரல் கேட்காத நிலைமை

## ஆளுநர் வேதநாயகன் வேதனை

ஏழைகளின் குரல் சில அரச அதிகாரிகளுக்குக் கேட்காத நிலைமையே இப்போது இங்கு இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வேதனை வெளியிட்டார்.

“தர்மம்” அமைப்பின் ஏற்பாட்டில் செவிப்புல சவால் உடையோரின் சைகைமொழி உரிமை மற்றும் விழிப்புணர்வு தொடர்பான நிகழ்வு கிளிநொச்சி பசுமைப்பூங்காவில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

“இலங்கையில் சைகை மொழி அங்கீகரிக்கப்பட வேண்டும், அரச நிறுவனங்களை இலகுவாக அணுகக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்“ என வலியுறுத்தப்பட்ட இந்த நிகழ்வில், இது தொடர்பான கோரிக்கை மனுவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கையளிப்பதற்காக வடக்கு மாகாண ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஆளுநர் தனது உரையில், இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் இங்கு நீங்கள் திரண்டிருப்பதன் மூலம் உங்கள் உரிமையை நிலைநாட்ட எவ்வளவு அக்கறையாக இருக்கின்றீர்கள் என்பதை உணர முடிவதாகக் குறிப்பிட்டார்.

உங்களின் குரல்கள் மாத்திரமல்ல ஏழைகளின் குரலும் அரச திணைக்களங்களிலுள்ளவர்களால் கேட்கப்படுவதில்லை என ஆளுநர் வேதனையுடன் சுட்டிக்காட்டினார்.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மனுவை ஜனாதிபதியிடம் ஒப்படைப்பேன் என்று குறிப்பிட்ட ஆளுநர், மாற்றாற்றலுடையோர் நிவாரணங்கள் கேட்டு வருவதில்லை மாறாக தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்கே விரும்புகின்றனர் என்பதை தான் மீண்டும் மீண்டும் தெரிவித்து வருவதாகக் கூறினார்.

தான் மாவட்ட செயலராகக் கடமையாற்றிய காலத்தில் அங்கு சைகை மொழிபெயர்ப்பாளர் ஒருவர் இருந்தமையால் உங்களில் பலரின் தேவைகளை தன்னால் இலகுவாக நிறைவேற்ற முடிந்ததாகக் குறிப்பிட்ட ஆளுநர், அவ்வாறான ஒருவர் ஏனைய திணைக்களங்களிலும் இருந்தாலும் சிறப்பாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தர்மம் அமைப்பின் நிறுவுநர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.










# கெஹெலிய ரம்புக்வெல்லவின் இரு வங்கிக் கணக்குகள் முடக்கம்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெல்லவின் வங்கிக் கணக்குகளை ஒரு வார காலத்திற்கு முடக்குமாறு லஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு சொந்தமான நடைமுறை , நிலையான வைப்பு கணக்குகள் ஆகிய இரண்டையும் முடக்குவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது

2023 ஆம் ஆண்டு 9ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு வார காலத்திற்கு இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைநீக்க உத்தரவை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்திய பின்னர் மேலும் நீடிக்க எதிர்பார்ப்பதாக லஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது

இந்த விசாரணை தொடர்பாக இதற்கு முன்னர் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி, உறவினர்கள் என பலரின் சொத்துக்களை முடக்க லஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

# மணல் கடத்திய டிப்பர் வாகனம் பொலிஸாரின் சூட்டில் சிக்கியது!

## கடத்தல்காரர்கள் தப்பியோட்டம்



மணல் கடத்திய டிப்பர் வாகனம் ஒன்றைப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கைப்பற்றியுள்ளனர். எனினும், கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று புதன்கிழமை யாழ். வடமராட்சி, வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோத முறையில் மணல் அகழ்ந்து கொண்டு தப்பிச் சென்ற டிப்பர் வாகனத்தைப் பருத்தித்துறை பொலிஸார் வல்லிபுரம் – ஆனைவிழுந்தன் வீதியில் வைத்து நிறுத்துமாறு பொலிஸார் கோரியபோது அது தப்பியோட முற்பட்டது. இதன்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி அதைக் கைப்பற்றினர்.

கடத்தக்காரர்கள் தப்பித்த நிலையில், டிப்பர் வாகனம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# தரம் 5 புலமைப்பரிசில் வழக்கு; எதிர்வரும் 31 ஆம் திகதி தீர்ப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பிலான வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 31 ஆம் திகதி வழங்கப்படும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளில் மூன்று வினாக்கள் கசிந்த சம்பவம் தொடர்பான விரிவான விசாரணையை எதிர்வரும் 31ஆம் திகதி அறிவிப்பதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த மனுக்கள் யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அரஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் மூன்று நாள்களாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் மற்றும் பிரதிவாதி சார்பில் அனைத்து சட்டத்தரணிகளின் வாய்மொழி விவாதங்கள் தற்போது முடிவடைந்துள்ளது.

எழுத்துப்பூர்வ உரைகள் இருப்பின் அவற்றை இன்று காலை 9 மணிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தர விடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த மனுக்கள் தொடர்பான முடிவு எதிர்வரும் 31ஆம் திகதி அறிவிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# வாகன இறக்குமதி கட்டுப்பாட்டை தளர்த்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியானது



Gazette Extraordinary
No. 2415/35
Dated December 18, 2024

GOVERNMENT NOTIFICATION

Imports and Exports Control Act, No. 1 of 1969

IN terms of the powers vested in me by Section 20 read together with Sub-Section 4(1) and Section 14 of the Imports and Exports (Control) Act, No. 1 of 1969 as amended by Act, No. 48 of 1985 and Act, No. 28 of 1987, I, Anura Kumara Dissanayake, the Minister of Finance, Planning and Economic Development promulgate following Regulations.

Anura Kumara Dissanayake
Minister of Finance, Planning and Economic Development

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

The Secretariat, Colombo 01, Sri Lanka.

2024.12.18





வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தள்ளப்பட்டமைக்குப் பிரதான காரணம் என்பதை அவர் நேற்றுத் தமது உரையில் விவரித்திருக்கிறார்.

இன ரீதியான பிரிவினையைக் கடந்து, நாட்டின் அனைத்து மக்களும் இலங்கையர் என்று ஒன்றுபடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான அமிலச் சோதனை ஒன்றையும் புதிய அரசின் முன்னால் அவர் பிரேரித்திருக்கிறார்.

வலிகாமம் வடக்கு தையிட்டியில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் தையிட்டி திஸ்ஸ விகாரை புதிதாகப் கட்டப்பட்ட முறைமை பற்றிய விடயங்களை அவர் விலாவாரியாக நேற்று நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார்.

அப்பகுதியில் திஸ்ஸ விகாரை என்ற பௌத்த வணக்க ஸ்தலம் இருந்தது என்பதை ஒப்புக்கொண்ட கஜேந்திர குமார் பொன்னம்பலம், அந்த வணக்கஸ் தலம் இருந்த நிலத்தை அப்படியே வெறுமனே விட்டுவிட்டு, அப்பாவி மக்களை விரட்டியடித்து, உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தாங்கள் வல்வந்தமாகச் சுவீகரித்து வைத்திருந்த பொது மக்களின் வேறு ஆறு ஏக்கர் நிலப் பரப்பில் – அதன் உரிமையாளர்களுக்குத் தெரியாமல் – இந்த ஆலயத்தை பலவந்தமாக இராணுவத்தினர் கட்டியுள்ளனர் என்ற உண்மையை அவர் வெளிப்படையாக நாடாளுமன்றத்தில் விவரித்தார்.

அந்த விகாரை இப்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள இடத்தில் அதனை கட்டுவதற்கான எந்த அனுமதியும் உள்ளூராட்சி அமைப்புகளிடமோ ஏனைய உரிய தரப்புகளிடமோ பெறப்படவில்லை என்பதை அவர் நேற்று நாடாளுமன்றத்தில் ஆதாரங்களோடு போட்டு உடைத்தார். அது, தனியாருடைய நிலத்தில் – பாதுகாப்பு உயர் வலயம் என்ற பெயரில் அரச இராணுவம் ஆக்கிரமித்த அந்தப் பகுதிக்குள் – நில உரிமையாளர்கள் வர முடியாத நிலையில் – பலவந்தமாக கட்டப்பட்டு உள்ளது என்பதை அம்பலப்படுத்திய கஜேந்திர குமார் பொன்னம்பலம், இந்த விடயத்தில் நீதி செய்ய இந்த அரசாங்கத்தினால் முடியுமானால் நாங்கள் எல்லோரும் 'இலங்கையர்' என்ற ஒன்றிணைப்பில் இருக்க முடியும் என்றார். அதைச் செய்ய தயாரா என்று புதிய அரசாங்கத்துக்கு சவால் விட்டிருக்கிறார் கஜேந்திரகுமார்.

சரியான சவால். இன பேதமற்ற அரசை நிறுவுவோம் என்று கூறிய இடதுசாரிகளுக்கு இது ஓர் அமில சோதனை. நீதி செய்ய அவர்கள் தயாரா?

\+ + +

வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் பிரசார செலவின விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்ற சட்ட ஏற்பாடு இப்போது தான் நடைமுறைக்கு வந்திருக்கின்றது. அதனால் பல வேட்பாளர்களும் இவ் விடயத்தை அதிக கவனத்துக்குரியதாக எடுக்காமல், அசட்டையீனமாக கணக்கு வழக்குகளை கொடுத்திருக்கின்றார்கள் என்றே தோன்றுகின்றது.

வடக்கு யாழ் மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்ட ஓர் எம்.பி. தமது தேர்தல் பிரசார செலவு ஆக 12,900 ரூபா மட்டுமே என்று அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார். தேநீர், சிற்றுண்டிச் செலவைத் தவிர, அவர் அதிகம் செலவு செய்யவில்லையாம். துண்டுப் பிரசுரம் அச்சடித்த செலவு கூட அவரது கணக்கு வழக்கில் காட்டப்படவில்லை. ஆனால் அவர் பெயரில் பல லட்சங்கள் வெளிநாட்டிலிருந்து தேர்தலுக்காக வந்து உருண்டமை பற்றி மக்களுக்கு தெரியும்.

யார் அந்த வேட்பாளர் என்று கேட்கின்றீர்களா? எல்லா விடயங்களையும் கோமாளித்தனமாக பண்ணும் வைத்தியர் அர்ச்சுனாதான் அவர். அவருடைய பொதுத் தேர்தல் பிரசாரச் செலவு 13 ஆயிரம் ரூபாவைக் கூடத் தாண்டவில்லை.

யாழ் மாவட்டத்தில் முக்கியமான சில வேட்பாளர்களின் மொத்த பிரசாரச் செலவினத்தைக் கீழே காட்டி உள்ளேன்.

இவர்களில் சுமந்திரன் மட்டுமே முகப் புத்தக விளம்பரத்திற்கான செலவினத்தை காட்டியிருக்கிறார்.

சிறுதரன் எம்.பி. உட்பட பலர் முகப்புத்தக செலவினத்தைக் காட்டவில்லை. அவை இந்தச் செலவினத்துக்குள் உட்படுத்தப்படுமானால், இவர்களின் பிரசார செலவு தேர்தல் சட்ட விதிகளை மீறியதாகிவிடும் என்பதுதான் இப்போதைய நிலைமை. இவ்விடயத்தை சம்பந்தப்பட்டோர் எப்படிக் கையாளப் போகின்றார்கள் என்பது அடுத்து வரும் மாதங்களில் பெரும் அரசியல் குண்டாக வெடிக்கக்கூடிய பின்புலத்தில் நோக்கப்பட வேண்டும்.

யாழ். வேட்பாளர்களின் பிரசார செலவு:-

\+ எம்.ஏ.சுமந்திரன் – ரூ.34,68,099.10
\+ எஸ்.சிறிதரன் – ரூ.39,54,580.00
\+ இ.அங்கஜன் – ரூ.37,88,850.00
\+ ஈ.சரவணபவன் – ரூ.10 70,062.00
\+ இ.அருச்சுனா – ரூ. 12,900.00
\+ ஜெ.ரஜீவன் – ரூ. 6,02,399.00
\+ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் – ரூ.30,93, 200.00
\+ கே.வி.தவராசா – ரூ. 18,00,000.00
\+ கு.சுரேந்திரன் – ரூ. 33,88,925.00
\+ டக்ளஸ் தேவானந்தா – தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களும் தமது கட்சியினால் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்துள்ளார். அது கட்சி சமர்ப்பிக்கும் செலவின அறிக்கை மூலம் அவதானிக்கப்பட வேண்டும்.

---

## 2028 இலும் நாமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திஸநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதி, விசேட உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் 2028 ஆம் ஆண்டில் கடனைச் செலுத்த வேண்டியுள்ளதால் மீண்டும் எம்முடைய நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்லும் என்ற கருத்தை விதைக்க எத்தனிக்கின்றனர். எதிர்வரும் 2028 ஆம் ஆண்டும் எம்முடைய அரசே ஆட்சியமைக்கும். ஆகவே, 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிலைமை மீண்டும் நாட்டில் ஏற்பட நாம் இடமளிக்கப்போவதில்லை.

2028 ஆம் ஆண்டுக்குள் வெளிநாட்டுக் கையிருப்பை 15.1 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதே அரசின் நோக்கமாகும்.

நாம் ஆட்சிக்கு வரும்போது அரசு சர்வதேச நாணய நிதியத்துடன், இரண்டாவது மீளாய்வைச் செய்திருந்தது. அதனை அடுத்து மூன்றாவது மீளாய்வை நாம் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து முன்னெடுத்தோம். அதன்போது இரண்டாம் மீளாய்வில் இணங்கிய பல விடயங்களில் திருத்தங்களை எம்மால் மேற்கொள்ள முடிந்தது.

உழைக்கும்போது அறவிடும் வரி தொடர்பில் துறைசார் நிபுணர்கள் மத்தியில் விரக்கதி காணப்பட்டது. அது தொடர்பில் நாம் கவனம் செலுத்தினோம். அதற்கமைய மூன்றாம் மீளாய்வின்போது சில திருத்தங்களை மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன், உழைக்கும்போது அறவிடும் வரி ஒரு இலட்சம் என்ற வரையறையை நாம் ஒன்றரை இலட்சம் என அதிகரித்துள்ளோம்.

இதற்கமைய ஒன்றரை இலட்சம் மாத வருமானம் பெறுபவர்களுக்கு 100 வீதி வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கூடிய வருமானம் பெறுபவருக்குக் குறைந்த சலுகையும், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அதிக நிவாரணம் கிடைக்கும் வகையிலும் உழைக்கும் போது அறவிடும் வரியில் திருத்தம் மேற்கொண்டுள்ளோம்." – என்றார்.

---

## அர்ச்சுனாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையியற் கட்டளைகளுக்கு முரணாகவும் உரையாற்றியதால் அவரின் உரை சபாநாயகரால் ஹன்சாட் பதிவிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று புதன்கிழமை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. இதனையடுத்து நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினா வேளையின்போது நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா யாழ்ப்பாணம் வைத்தியசாலை தொண்டர் அடிப்படையிலான ஊழியர்கள் தொடர்பில் விசேட கூற்றை முன்வைக்க சபாநாயகர் அனுமதியளித்தார்.

முதலில் யாழ். வைத்தியசாலை தொண்டர் அடிப்படையிலான ஊழியர்கள் தொடர்பில் தெளிவாகப் பேசிய அர்ச்சுனா பின்னர், தடம் மாறி நிலையியற் கட்டளைகளுக்கும் சபைக்கு முரணாகவும் பேசத் தொடங்கினார். அப்போது சில தடவைகள் குறுக்கிட்ட சபாநாயகர், விசேட கூற்று தொடர்பான ஆவணத்தில் என்ன இருக்கின்றதோ அதை மட்டும் பேசுமாறு வலியுறுத்தியபோதும் அர்ச்சுனா அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்த அர்ச்சுனா எம்.பி., முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரையும் கடுமையாக விமர்சித்தார். இதன்போது சபாநாயகரால் அர்ச்சுனா எம்.பி.க்கு மீண்டும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந்நிலையில், எதிர்க்கட்சியினரும் அரச தரப்பினரும் அர்ச்சுனா எம்.பி.யுடன் முரண்படத் தொடங்கினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தொடர்ந்து விடயத்துக்கு முரணாகவே கூச்சலிட்டு பேசிக்கொண்டிருந்தார். அப்போது எழுந்த சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்நாயக்க, "அர்ச்சுனா எம்.பி. யாழ். வைத்தியசாலை தொடர்பில் விசேட கூற்றை முன்வைக்கின்றார். ஆனால், விசேட கூற்றை முன்வைப்பதாயின் அதனுடன் தொடர்புபட்ட அமைச்சருக்கு முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். ஆனால், இந்தக் கூற்று தொடர்பில் சுகாதார அமைச்சருக்கு அறிவிக்கப்படவில்லை. ஆகையால், இவருக்கு நாடாளுமன்றச் செயலாளர் எவ்வாறு கூற்றை முன்வைக்க அனுமதித்தார் எனக் கேட்கின்றேன். அத்துடன், இவர் விடயத்துக்கு முரணாகப் பேசும் விடயங்கள் தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும்." – என்றார்.

இவ்வாறு சபை முதல்வர் கூறிக்கொண்டிருந்தபோதும் அர்ச்சுனா எம்.பி. கூச்சலிட்டுக்கொண்டிருந்தார். இந்நிலையில் அவரின் நிலையியற் கட்டளைகளுக்கு முறையான கருத்துக்களை ஹன்சாட் பதிவிலிருந்து நீக்குமாறு சபாநாயகர் அறிவித்தார்.





# வடக்கு மாகாண சபைக்கு இரண்டு புதிய செயலர்கள்

## நியமனக் கடிதங்களை வழங்கினார் ஆளுநர்

வடக்கு மாகாண சபைக்கு இரண்டு புதிய செயலர்களுக்கான நியமனம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நேற்று புதன்கிழமை ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பொ.குகநாதனுக்கும், சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலராக திருமதி ப.ஜெயராணிக்கும் வடக்கு மாகாண ஆளுநரால் நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## 100 மில்லியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாக்கல் செய்து 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரியுள்ளார்.

யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு தொடர்பில் கட்டாணை வழங்குவதற்காக நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் அந்த வழக்கு நேற்றே எடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது வழக்காளி சார்பில் சட்டத்தரணி த.தினேஸின் அனுசரனையுடன், சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் ஏற்பாடாகியிருந்தார்.

வழக்காளியான வைத்தியர் சத்தியமூர்த்தி தடுப்புக் காவலில் இருந்தபோது அங்கு அவருக்கு நிகழ்ந்த விடயங்கள் தொடர்பில் அவதூறாக அர்ச்சுனாவால் சொல்லப்பட்ட விடயங்கள் மற்றும் அர்ச்சுனா யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்து வைத்தியர் சத்தியமூர்த்தியுடன் சில வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு, அவருடன் பிணக்குக்கு உட்பட்ட விடயங்கள், அர்ச்சுனா தன்னுடைய முகப்புத்தகத்தில் வெளியிட்ட காணொளி என்பவற்றால் அவதூறு பரப்பப்பட்டது என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்டது.

அர்ச்சுனா தொடர்ந்தும் வைத்தியர் சத்தியமூர்த்திக்கு எதிராகவும், அவருடைய மாண்பு மற்றும் கீர்த்திக்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலும் கருத்துக்களைத் தெரிவிப்பதாகவும் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

அவரால் கூறப்படும் கருத்துக்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதோடு அடிப்படை அறமற்ற நபர் ஒருவருடைய கருத்தாகும் என்று வழக்காளி வைத்தியர் சத்தியமூர்த்தி தனது சத்தியக்கூற்றிலே தெரிவித்திருந்தமை தொடர்பில் சட்டத்தையும், நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளையும் சுட்டிக்காட்டி நீண்ட சமர்ப்பணம் வழக்காளி தரப்பில் மன்றில் முன்வைக்கப்பட்டது.

மேலும் வழக்காளியானவர் தனது சத்தியக்கூற்றிலேயே தனது நோக்கம் எதிராளியான இராமநாதன் அர்ச்சுனா நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே, குடிமகன் என்ற வகையிலே அல்லது பொது நிறுவனங்களைப் பொறுப்புக் கூற வைக்க வேண்டும் என்ற நியாயமாக செயற்படுமிடத்து, அவற்றுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், பொய்யான வகையிலும், அவதூறான வகையிலும் அவரால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் கட்டளையாக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டது.

குறித்த விடயங்களைச் செவிமடுத்த நீதிவான் வழக்காளியால் கோரப்பட்டவாறு, அவருக்கு எதிராக அவதூறான கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கக்கூடாது என எதிராளி இராமநாதன் அர்ச்சுனாவுக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தார்.

இது ஒரு முகமாக வழக்காளி தரப்பை மட்டும் கேட்டு வழங்கப்படும் கட்டாணை என்பதால், இது தொடர்பான அறிவித்தல் எதிராளிக்கு வழங்கப்பட்டுள்ளது.

கட்டாணை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை வலிதாக இருக்கும். அன்றைய தினம் அதனை நீடிப்பதா, இல்லையா என்பது தொடர்பான தீர்மானத்தை நீதிவான் எடுப்பார்.

இது தொடர்பில் எதிராளி இராமநாதன் அர்ச்சுனாவுக்குக் கட்டளையின் பிரதியையும், அறிவித்தலையும் வழங்குமாறு மன்று கட்டளையிட்டது.

## மாவையின் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவை சேனாதிராஜாவின் இராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக் கொள்வதா, இல்லையா என்பது தொடர்பான வாக்கெடுப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவிருக்கையில் அதை இடைநிறுத்தித் தடை உத்தரவு பிறப்பிக்கவும், மாவை சேனாதிராஜா தொடர்ந்து கட்சியின் தலைவராகப் பதவி வகிக்கவும் உத்தரவிடக் கோரி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்களின் விவரம் பற்றிய விடயம் இன்று தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, நேற்று சட்டத்தரணிகளோடு ஆலோசனை கலப்பதில் மாவை சேனாதிராஜா மும்முரமாக இருந்தார் என்று பிறிதொரு தகவல் தெரிவித்தது.

இது பற்றிய மேலதிக விவரங்கள் இன்று வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.



# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தேவைப்பாடுகள் குறித்து கலந்துரையாடல்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் தேவைப்பாடுகள் மற்றும் மேம்பாடுகள் தொடர்பில் வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சுகாதார அமைச்சின் மூத்த உதவிச் செயலர் திருமதி அ.சாந்தசீலன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பத்திரண, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் பொறுப்பு வைத்திய அதிகாரி கோ.ரஜீவ் ஆகியோருடன், நலன்புரிச் சங்கத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மோடியின் வலியுறுத்தல்

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அண்மையில் இந்தியா சென்றிருந்த போது அவரையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு கூட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்த சில கருத்துக்களை நேற்று தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

தமிழரசுக் கட்சி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வாவின் நினைவுத் தூபியில இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பத்திரிகையாளரை சந்தித்த சமயமே சுமந்திரன் இந்த விடயங்களைச் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

இலங்கைத் தமிழர்களுடைய அபிலாசைகளையும், இலங்கையின் அரசமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பான தமது வாக்குறுதிகளையும் இலங்கை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும் என்பதையும் இந்தியப் பிரதமர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இவை இரண்டையும் சேர்த்து பார்த்து அவற்றினூடே சொல்லப்படுகின்ற விடயங்களை சுமந்திரன் நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் தொகுத்து விளங்கப்படுத்தி இருக்கின்றார்.

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவது என்றால் அந்த அபிலாசைகள் யாவை என்ற கேள்வி எழுகின்றது.

1956 முதல் தமிழ் மக்கள் தங்களின் ஜனநாயக ரீதியான கருத்தியல் வெளிப்பாடு மூலம் இலங்கை தமிழரசுக் கட்சியையும் அது முன்னிறுத்திய சமஷ்டிக் கோரிக்கையையும் சலனம் இல்லாமல் தங்கள் கருத்து நிலைப்பாடாக முன்வைத்து வந்துள்ளனர் என்பதை சுமந்திரன் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழர்கள் தங்களுடைய அபிலாஷை சமஷ்டி அடிப்படைக்கு குறைந்ததல்லாத தீர்வு என்பதைத் தெட்டத் தெளிவாக - உறுதியாக - மற்றமே இல்லாமல் - ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதுதான் கடந்த கால வரலாறு. அதையே சுமந்திரன் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

தமிழ்மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தமது கருத்து ஊடாக இந்திய பிரதமர் வலியுறுத்துவது அதைத்தான் என்று தெளிவுபடுத்துகிறார் சுமந்திரன்.

இலங்கை அரசமைப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இந்திய பிரதமர் கூறுவது இலங்கையின் அரசமைப்பின் ஒரு பகுதியான 13 ஆவது மற்றும் 16 ஆவது திருத்தங்களின் முழு நடைமுறையாக்கத்தையும் உட்படுத்தியது என்பதை அவர் தெளிவுபடுத்துகின்றார்.

ஆக, இந்திய பிரதமரின் கருத்து தொடர்பாக சுமந்திரன் தெளிவு படுத்திய விடயங்கள் மூன்று.

ஒன்று - தமிழர்களுடைய நீண்ட கால அபிலாஷைகளான சமஷ்டி முறைமையை நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள்.

அடுத்தது - ஏற்கனவே வாக்குறுதி அளிக்கப்பட்டபடி புதிய அரசமைப்பு உருவாக்கம் நடைமுறைக்கு வரும் வரை 13 ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் - காணி, பொலிஸ் அதிகாரப் பகிர்வு உட்பட அனைத்து விவகாரங்களையும் - நடைமுறைக்கு கொண்டு வாருங்கள்.

மூன்றாவது - மாகாண சபை தேர்தல்களை விரைந்து நடத்தி மாகாண சபைகளை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளியுங்கள்.

இந்த மூன்று விடயங்களும் இந்திய பிரதமர் இப்போது இலங்கை ஜனாதிபதியின் புதுடில்லி விஜயத்தின் போது வலியுறுத்திய அம்சங்கள் எனினும், அவை இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள்தான். அவற்றையே இந்தியப் பிரதமர் இப்போது நாசூக்காக இலங்கை ஜனாதிபதிக்கு நினைவூட்டி இருக்கின்றார்.

அவற்றை நடைமுறைப்படுத்துவது இலங்கை ஜனாதிபதியின் கடப்பாடும் பொறுப்பும் என்பதை இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவருக்கு நினைவூட்டிச் சுட்டிக்காட்டி இருக்கின்றார் என்றே கொள்ள வேண்டும்.

# வேட்டையாடப்பட்ட சிறுத்தையின் உடலம் தலை, கால்களற்ற நிலையில் ஹட்டனில் மீட்பு



(க.கிஷாந்தன்)

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போடைஸ் தோட்டப்பகுதியிலிருந்து சிறுத்தை ஒன்றின் உடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்ட இந்த சிறுத்தையின் உடலத்திலிருந்து தலை, நான்கு கால்கள் என்பன வெட்டி அகற்றப்பட்டுள்ளன என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தொ பகுதியில் சிறுத்தையின் சடலம் ஒன்று கிடப்பதாகத் தோட்டத் தொழிலாளர்களால் ஹட்டன் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் நல்லதண்ணி வன விலங்கு அலுவலக அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

சிறுத்தையின் சடலம் கண்டு பிடிக்கப்பட்ட போது, சிறுத்தையின் தலை மற்றும் நான்கு கால்கள் வேட்டையாடுபவர்களால் வெட்டப்பட்டிருந்தன என ஹட்டன் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நல்லதண்ணி வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமார் 10 வயதுடைய நன்கு வளர்ந்த சிறுத்தை கொல்லப்பட்டுள்ளதாகவும், சிறுத்தையின் சடலம் ஹட்டன் நீதிவான் நீதிமன்றின் வழிகாட்டுதலுடன் பிரேத பரிசோதனைக்காக ரன்தெனிகல வனவிலங்கு கால்நடை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.



# நிசாம் காரியப்பர் சத்தியப்பிரமாணம்

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக மொஹமட் நிசாம் காரியப்பர் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன முன்னிலையில் நேற்று புதன்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

கடந்த நவம்பர் 21 ஆம் திகதி பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றதுடன், அன்றைய தினம் புதிய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்தனர்.

அதுவரை ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்த நான்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கான பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

கடந்த 12 ஆம் திகதி இந்தப் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானியை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது.

இதற்கு அமைய அந்த நான்கு உறுப்பினர்களில் அர்ஜுன சுஜீவ சேனசிங்க, கௌரவ முகம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது மற்றும் மனோ கணேஷன் ஆகிய மூவர் நேற்று முன்தினம் பதவிச் சத்தியம் செய்தனர்.

# வவுனியாவில் பத்து மாதங்களில் மாரடைப்பால் 45 பேர் மரணம்!

(கி.வசந்தன்)

வவுனியா பொது வைத்தியசாலையில் இவ்வாண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் வரையுமான 10 மாத காலப் பகுதியில் மாரடைப்பால் 45 பேர் மரணம் அடைந்திருக்கின்றனர் என வவுனியா சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாரடைப்பால் இறந்தவர்கள் தொடர்பில் விவரம் கேட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 20 வயது தொடக்கம் 40 வயது வரையானவர்களில் ஒருவரும், 40 தொடக்கம் 60 வயது வரையானவர்களில் 13 பேரும், 60 தொடக்கம் 100 வயது வரையானவர்களில் 31 பேருமாக 45 பேர் இவ்வாறு மாரடைப்பால் மரணமாகியுள்ளனர்.

அண்மைக்காலமாக வவுனியாவில் மாரடைப்பால் மரணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்ட நிலையில் அதற்கான பல்வேறு காரணங்களும் சுகாதார திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எலிக் காய்ச்சலினால் யாழ். மாவட்டத்தில் இதுவரையில் 110 பேர் பாதிப்பு ; 7,200 பேருக்குத் தடுப்பு மருந்து வழங்கல்




யாழ் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக இதுவரை 110 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 7200 பேருக்கு இதுவரை தடுப்பு மருந்துகள் வழங்கப்படுள்ளன என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 28 பேரும், யாழ் போதனா வைத்தியசாலையில் 8 பேரும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 6 நோயாளர்களும், யாழ் போதனா வைத்தியசாலையில் 5 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் இந் நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் ஏற்படவில்லை.

இதுவரை யாழ் மாவட்டத்தில் இந் நோய் காரணமாக 7 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எலிக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்காக தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

நேற்றுவரை ஏறத்தாழ 7,200 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் காய்ச்சல் நோயாளர்களை இனங்காண்பதற்காக சுகாதாரப் பணியாளர்கள் வீடுவீடாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள கால்நடைகளில் இக்கிருமித்தொற்று உள்ளதா என்பதை ஆய்வு செய்வதற்காக கொழும்பிலிருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலிருந்து குழு ஒன்று யாழ் மாவட்டத்திற்கு இன்று(நேற்று) வருகை தந்துள்ளது. இக்குழு பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்குச் சென்று கால்நடைகளிலிருந்து ஆய்வுகளை மேற்கொண்டு குருதி மாதிரிகளை எடுத்துச் செல்லவுள்ளது. – என்றார்.

# அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவராக ஹர்ஷ டி சில்வா நியமனம்

அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சியின் இணக்கப்பாட்டுடன் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக ஹர்ஷன சூரியப்பெரும, ரவி கருணாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, நிமல் பலிஹேன, விஜேசிறி பஸ்நாயக்க, திலின சமரகோன் மற்றும் லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோர் அடங்குகின்றனர்.





# சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுகிறார் ரவிச்சந்திரன் அஷ்வின்

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற் பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஷ்வின் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் பிரிஸ்பனில் நடைபெற்ற 3 ஆவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்ததை தொடர்ந்து அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இந்தியாவின் சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான அஷ்வின், 106 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 537 விக்கெட்களை கைப்பற்றியுள்ளார்.

அவர் 8 தடவைகள், ஒரே போட்டியில் 10 விக்கெட்களை எடுத்துள்ளார்.

அத்துடன். 6 தடவைகள் சதமடித்துள்ள அஷ்வின் 14 அரைசதமடித்துள்ளார்.

38 வயதான அஷ்வின் 2010 ஆம் ஆண்டு முதல் இந்திய அணிக்காக சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடியுள்ளார்.

டெஸ்ட் தொடரில் 11 தடவைகள் தொடர்நாயகன் விருது வென்று இலங்கையின் முரளிதரனின் சாதனையை சமன் செய்துள்ளார்.

அஷ்வினின் சாதனைகளுக்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நன்றி தெரிவித்துள்ளது.

அஷ்வினுடன் 14 ஆண்டுகள் விளையாடியுள்ளதாகவும் ஓய்வு குறித்து அறிவிக்கும் போது தாம் உணர்ச்சிவசப்பட்டதாகவும் விராட் கோஹ்லி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ரவிச்சந்திரன் அஷ்வின், 2025 ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக பங்கேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இலத்திரனியல் கடவுச்சீட்டு கொள்வனவு குறித்து சட்டமா அதிபர் நீதிமன்றுக்கு விளக்கமளித்தார்


இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனு தொடர்பில் சட்டமா அதிபரினால் நீதிமன்றுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

5 மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனு தொடர்பில் தேசிய பெறுகைகள் குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளை அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரைகளைப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஊடாக அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்று அவர் அறியப்படுத்தியுள்ளார்.

மேற்படி கடவுச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுவை சவாலுக்கு உட்படுத்தி எபிக் லங்கா தனியார் நிறுவனம் தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான மேலதிக மன்றாடியர் நாயகம் சுமதி தர்மவர்தன இந்த விடயம் தொடர்பான சமர்ப்பணங்களை முன்வைத்தார்.



# மாணவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கான மேலதிக மதிப்பீடு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்


பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது தொடர்பான மேலதிக மதிப்பீடு நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

மேற்படி பாடசாலை மாணவர்களுக்கு இந்த கொடுப்பனவை வழங்குவதற்கான மேலதிக மதிப்பீடு நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது மேலதிக மதிப்பீடு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டதாக நாடாளுமன்ற செயலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மாதாந்த உதவித் தொகையாகத் தெரிவு செய்யப்படும் பாடசாலை மாணவர்களுக்கு 6,000 ரூபா வழங்கப்படவுள்ளது.

# சாதாரண தரப் பரீட்சை திகதிகள் அறிவிப்பு



2024 (2025) கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் திகதிகள் வெளியாகியுள்ளன.

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை சாதாரண தரப் பரீட்சை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை, 1911, 0112784208, 0112784537 மற்றும் 0112786616 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் சாரதிகள் அவதானத்துடன் செயற்படவும்



அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் சாரதிகளை அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலைகளில் ஏற்பட்ட விபத்துகளில் 16 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

அதிவேக நெடுஞ்சாலையில் வாகனத்தைச் செலுத்தும் போது வீதி விதிகளை மீறிச் செயற்பட வேண்டாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சாதாரண வீதிகளில் பயணிக்கும் வேகத்துக்கும் அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வேகத்துக்கும் இடையே பாரியளவு வேறுபாடுகள் உள்ளன.

இதனால் சிறியளவான தவறுகளும் பாரிய விளைவுகளுக்கு வழிவகுக்கும் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

# அம்பேத்கருக்கு எதிராக ஒருபோதும் பேசியதில்லை

## அமித் ஷா தெரிவிப்பு



"அம்பேத்கருக்கு எதிராக நான் ஒருபோதும் பேசியதில்லை. எனது கருத்தை காங்கிரஸ் கட்சி திரித்து விட்டது."

– இவ்வாறு உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

டில்லியில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் காங்கிரஸ் மீது அவர் இவ்வாறு விமர்சித்துள்ளார்.

இதன்போது மாநிலங்களவையில் அம்பேத்கர் குறித்து தான் தெரிவித்த கருத்துக்கள் பற்றி அமித் ஷா விளக்கம் அளிகையில்,

"எனது கருத்துக்கள் தவறாக சித்தரிக் கப்பட்டுள்ளன. காங்கிரஸ் கட்சி பொய் செய்திகளை பரப்புகிறது. அம்பேத் கருக்கு எதிராக என்னால் ஒரு போதும் பேச முடியாது.

நாடாளுமன்றத்தில் பேசிய கருத் துக்களை காங்கிரஸ் கட்சி திரித்து கூறிய விதம் கண்டிக்கத்தக்கது. காங் கிரஸ் கட்சி அம்பேத்கருக்கு எதிரா னது, இடஒதுக்கீட்டுக்கு எதிரானது, அரசமைப்புக்கு எதிரானது. காங்கி ரஸ் அரசு அம்பேத்கருக்காக ஒரு போதும் மணிமண்டபம் கட்டியதில்லை. அம்பேத்கருடன் தொடர்புடைய பல இடங்களை கட்டியது பா.ஜ.க. அரசுகள் தான். அவரது பாரம்பரியத்தை போற் றும் படி அரசியலமைப்பு தினத்தை அறிவித்தது மோடி அரசுதான்.

நாடாளுமன்றத்தில் பேசிய பா.ஜ.க வினர், நாங்கள் ஆட்சியில் இருந்த போதெல்லாம் எவ்வாறு அரசமைப்பு சட்டத்தினை பாதுகாத்தோம் என்பதனை பட்டியலிட்டனர். இது காங்கிரஸ் கட்சி, அம்பேத்கருக்கு எதிரானது, இடஒதுக்கீடு, அரசமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்பதைக் காட்டுகிறது. காங்கிரஸ் வீர் சாவர்கரை அவமதித்தது, அவசர நிலையை கொண்டுவந்ததன் மூலம் அரசமைப்பை அவமதித்தது."– என் றார்.

# அம்பேத்கர் பெயரை உள்ளம் மகிழ உச்சரித்துக்கொண்டே இருப்போம்

## அமித் ஷாவுக்கு விஜய் கண்டனம்



"அம்பேத்கர் பெயரை உள்ளமும் உதடுகளும் மகிழ உச்சரித்துக் கொண்டே இருப்போம். அண்ணலை அவமதித்த ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சரை, தமிழக வெற்றிக் கழகத் தின் சார்பாக வன்மையாகக் கண்டிக் கிறேன்."

– இவ்வாறு தமிழக வெற்றிக் கழகத் தின் தலைவர் விஜய் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள எக்ஸ் தள பதிவில்,

"யாரோ சிலருக்கு வேண்டுமானால் அம்பேத்கர் பெயர் ஒவ்வாமையாக இருக்கலாம். சுதந்திரக் காற்றை சுவாசிக் கும் இந்திய மக்கள் அனைவருக்கும் அவர்கள் உயரத்தில் வைத்துப் போற்றும் ஒப்பற்ற அரசியல் மற்றும் அறிவுலக ஆளுமை, அவர். அம்பேத்கர்... அம் பேத்கர்... அம்பேத்கர்... அவர் பெயரை உள்ளமும் உதடுகளும் மகிழ உச்சரித் துக்கொண்டே இருப்போம்.

எங்கள் கொள்கைத் தலைவரை அவமதிப்பதை ஒருபோதும் அனும திக்க முடியாது. அண்ணலை அவ மதித்த ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சரை, தமிழக வெற்றிக் கழகத் தின் சார்பாக வன்மையாகக் கண்டிக் கிறேன்." – என்று தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின் 75 ஆவது ஆண்டைக் குறிக்கும் விவாதத்தின் போது மாநிலங்களவையில் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றிய அமித் ஷா,

"பி.ஆர். அம்பேத்கரின் பெயரை பயன் படுத்துவது இப்போது ஒரு "பேஷன்" ஆகிவிட்டது. எதற்கெடுத்தாலும் அம் பேத்கர், அம்பேத்கர், அம்பேத்கர், அம் பேத்கர், அம்பேத்கர், அம்பேத்கர் என்று பேசுகிறார்கள். அதற்கு பதிலாக கடவு ளின் பெயரை அத்தனை முறை கூறியி ருந்தால், உங்களது 7 பிறவிக்கும் சொர்க் கத்தில் இடமாவது கிடைத்திருக்கும்." என பேசினார்.

இந்தப் பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தி யதை தொடர்ந்து அமித்ஷா பேச்சுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

# டில்லியில் அபாயகரமான நிலைக்கு மீண்டும் வீழ்ச்சியடைந்த காற்றின் தரம்

இந்தியாவின் டில்லியில் காற்றின் தரம் அபாயகரமான நிலைக்கு மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கொவிட்-19 தொற்றை விடவும் இது சுகாதார ரீதியாக பாரிய பாதிப்பை ஏற் படுத்தும் என நிபுணர்கள் எச்சரித் துள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனம் நிர்ணயித் துள்ள பாதுகாப்பு எல்லையை விடவும்



டெல்லியின் காற்றின் தரம் 35 மடங்கு வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதனால் மக்களுக்கு மூச்சுத் திணறல், கண்கள் மற்றும் தொண்ட- டயில் அரிப்பு இருப்பதாக வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

சிறுவர்கள் மற்றும் முதியவர்களை முடியுமான அளவு வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு அந்த நாட்டு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

# வனுவாட்டு தீவில் நில அதிர்வு; அவசரகால நிலை பிரகடனம்!






பசுபிக் வலயத்திலுள்ள வனுவாட்டு தீவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நில அதிர்வு அனர்த்தத்தினால் பலியானவர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், தொடர்ந்தும் இடிபாடுகளில் தேடல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனுவாட்டுவில் நேற்று முன்தினம் 7.3 மெக்னிடியூட் அளவிலான நில அதிர்வு பதிவானதுடன் பல பின் அதிர்வுகளும் பதிவாகியுள்ளன.

இந்த அனர்த்தத்தில் 200 பேர் காயங்களுக்கு உள்ளாகி, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நில அதிர்வினால் அங்குள்ள அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளின் தூதரகங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் சேதமடைந்தன.

அத்துடன், அங்கு மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தேடுதல் மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், பொது மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, ஏழு நாள் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வனுவாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குவைத்துக்கு விஜயமாகிறார் இந்தியப் பிரதமர் மோடி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 21 ஆம் திகதி குவைத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன

40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ஒருவர் குவைத்துக்குச் செல்வது இதுவே முதல்முறை என்று அந்த ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

அதன்படி, இந்தியப் பிரதமர் தனது வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தின் போது, குவைத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பழமைவாய்ந்த நட்புறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது

குவைத் வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா அலி அல்-யஹ்யா இந்த மாத ஆரம்பத்தில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்

இந்த விஜயத்தின் போதே இந்தியப் பிரதமருக்கு உத்தியோபூர்வ அழைப்பை விடுத்தார்.

இந்த அழைப்பைத் தொடர்ந்தே எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குவைத் செல்லவுள்ளார்.

# புற்றுநோய் தடுப்பு மருந்தை கண்டுபிடித்தது ரஷ்யா!



புற்றுநோய்க்கு தடுப்பூசி மருந்தை கண்டுபிடித்து விட்டதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

கேன்சர் எனப்படும் புற்றுநோயைக் குணப்படுத்த பல நாடுகள் தடுப்பூசி கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் நிலையில் அசுயே அடிப்படையிலான தடுப்பூசியை உருவாக்கியுள்ளதாக ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

ரஷ்யா விஞ்ஞானிகள் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசியை உருவாக்கும் முயற்சியில் இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவும், விரைவில் அது பயன்பாட்டுக்கு வரும் என்றும் அந்நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதன்படி புற்றுநோய்க்கு தடுப்பூசியை உருவாக்கி விட்டோம் எனவும், இந்த தடுப்பூசி 2025ஆம் ஆண்டு முதல் பாவனைக்கு வரும் எனவும், குறித்த தடுப்பூசிகளை நோயாளிகளுக்கு இலவசமாக வழங்க உள்ளதாகவும் ரஷ்ய சுகாதாரத்துறை அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 19.12.2024




உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்து அதன் மூலம் பிரகாசிக்கலாம். கலை மற்றும் இசை போன்றவற்றில் ஈடுபட்டுப் பயனடையலாம். உங்கள் வளர்ச்சிக்கு இன்றைய நாளைப் பயன்படுத்தலாம். இன்று அதிக முயற்சி எடுத்து அதிக பலன் பெறும் நாள்.

உங்கள் பணியில் வளர்ச்சி காணப்படும். புதிய விஷயங்களை கற்றுக்கொள்வீர்கள். பணி நிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் பழகும் போது நகைச்சுவை உணர்வு வெளிப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் தேவையைக் காட்டிலும் அதிகமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்கள் தைரியம் உங்களுடைய ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கும்.




உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள். சுய வளர்ச்சி உங்களுக்கு வழி காட்டும். பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் திறமை உங்கள் பணியில் வெளிப்படும். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும் நல்ல வாய்ப்பு இன்று காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாகப் பழகுவீர்கள். இதனால் அவர் உங்களை நன்கு புரிந்து கொள்ள உதவும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்களால் சேமிக்க இயலும்.

உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.




இன்று சாதகமான நாள் அல்ல. மன உளைச்சலை சமாளிக்க அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் விருப்பங்களை அடைவதற்கு ஏதோ ஒன்று குறைவது போல உணர்வீர்கள்.

நீங்கள் வெற்றி பெறுவதற்கு சரியாக திட்டமிட வேண்டியது அவசியம். உங்களின் பாதி வேலை முடியும், இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் உறவு செழித்து வளர உங்கள் சஞ்சலமான மனது உகந்ததல்ல. உங்கள் துணையிடம் உங்கள் உள்ளத்தை வெளிபடுத்த முடியாது. இன்று அனுசரணை தேவை.

பணம் இன்று குறைந்து காணப்படும். பண வரவு காணப்பட்டாலும் அதில் திருப்தி இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.




இன்று விரைவான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இதனால் நல்ல வாய்ப்புகளை இழக்காமல் தடுக்கலாம்.

உங்கள் பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்குக் கவலையைத் தரும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து சில தடைகளை எதிர்கொள்ள நேரும்.

எளிய விஷயங்களையும் இன்று கடுமையாக உணர்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு பாரமரிக்க உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். சகஜமாக இல்லாவிட்டால் திருப்தி கிட்டாது.

தேவையற்ற செலவுகளால் உங்கள் பணம் கரையும். சேமிப்பதற்கும் குறைந்த வாய்ப்பே உள்ளது.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்க வேண்டும் எனில் உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை. பாடல்கள் கேட்பது, திரைப்படம் பார்ப்பது உங்களுக்கு நல்லது.

உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையுடன் பணியாற்ற வேண்டும். இதனால் செய்த வேலையையே திரும்ப செய்ய நேரும்.

தகவல் பரிமாற்றத்தில் சில குழப்பங்கள் காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் கடுமையாக உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனைத் தவிர்த்தல் வேண்டும். விட்டுக் கொடுப்பதன் மூலம் மகிழ்ச்சியைத் தக்க வைக்கலாம்.

நிதியைப் பொறுத்தவரை உங்கள் எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கும். ஆனால் அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.




இன்றைய நாள் அபாரமாக இருக்கும். உங்களின் சிறந்த தகவல் பரிமாற்றம் மூலம் நெருங்கியவர்களின் இதயத்தைத் தொடுவீர்கள். உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்கள் பணி செய்யும் முறையை மேம்படுத்துவீர்கள். சக பணியாளர்களுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் உங்கள் துணையை மகிழ்ச்சிப்படுத்தலாம். நீங்கள் பொருத்தமான ஜோடிக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

இன்று வரவு அதிகமாகக் காணப்படும். இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

நீங்கள் தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை ஆக்கபூர்வமான நாளாக ஆக்கலாம். உறுதி மற்றும் முறையான திட்டமிடல் மூலம் உங்கள் இலக்குகளை அடையலாம். இன்றைய நாள் பயனுள்ளதாக அமையும்.

இன்று பணியிடத்தில் அபாரமான வெற்றி கிடைக்கும். உங்கள் பணியில் கூடுதல் பலன்களும் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். தகவல்களைச் சிறந்த முறையில் பரிமாற்றம் செய்வீர்கள். உங்கள் வசீகரமான பேச்சு உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்யும்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சிறப்பான நாள். இன்று சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. புதிய முதலீடுகளும் பயன் தரும்.

உங்கள் தைரியமும் உறுதியும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று சவால்கள் மிகுந்த நாள். எனவே அமைதியாக எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று சூழ்நிலைகளை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று திட்டமிட்டு தொழில் சார்ந்த முறையில் பணியாற்றினால் சிறந்தது.

மனதில் கவலை தரும் எண்ணங்களை வளர்ப்பீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இந்த உணர்வை தவிர்த்தல் வேண்டும்.

பண வரவு திருப்திகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் வருத்தப்படுவீர்கள்.

இன்று முதுகு வலி ஏற்படலாம். இசையை கேட்பதன் மூலம் அல்லது தியானம் மூலம் அமைதி பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.12.2024




இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாக காணப்படாது. உங்கள் மனதில் காணப் படும் குழப்பம் காரணமாக உங்கள் ஆர்வம் குறையும். உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும். முடிவெடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும்.

பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும். பணிச் சுமை அதிகமாக காணப்படும். உங்களை தயார்படுத் திக் கொள்வதன் மூலம் வெற்றியை அடையலாம்.

உங்களின் மாறுபடும் மன நிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வைத் தவிர்த்து அமைதியாக இருங்கள்.

உங்களிடம் குறைந்த அளவு பணமே காணப்படும். பணம் சேர்ப்பதற்குத் தடைகள் காணப்படும். சில பரபரப்பான தருணங்களைச் சந்திக்க நேரும்.




உங்கள் வீட்டில் விருந்தினர் வரு கையால் இன்று உற்சாகம் காணப்படும். மகிழ்ச்சியாக இருக்க இது ஒரு நல்ல வாய்ப்பு. முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளைப் பயன்படுத்திக் கொ-ள்ளலாம்.

பணியிடத்தில் வெற்றியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களிடம் உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். அவர்களின் முழு ஆதரவு கிடைக் கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். உங்களின் இந்த அணுகுமுறையால் உங்கள் பிரிய மானவர் மகிழ்ச்சியடைவார்.

இன்று உங்கள் பணத்தேவைகள் பூர்த்தியடையும் நாள். இன்று உங்களுக்கு பெரிய அளவில் பணம் கிடைப்ப தற்கான அதிர்ஷ்டமான நாள்.




இன்று அமைதி நிலவும் நாள். உங்களை நிரூபிக்க வாய்ப்பு கிடைக் கும் நாள். உங்கள் விருப்பங்கள் நிறை வேறும் நாள். உங்கள் முயற்சிகள் பலன் தரும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். திறமையுடன திட்டமிட்டு உங்கள் பணிகளைக் குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

காதல் வயபட்ட உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் பிரியமானவர் உங்களை நேசிப்பார்.

உங்கள் பணம் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இன்று செழிப்பான நிலை காணப்படும்.

இன்று உங்களுக்குத் தேவையான ஆற்றல் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் உங்க ளுக்கு வழி காட்டும்.




இன்று முக்கிய முயற்சிகள் கூட சிறந்த பலன்களை அளிக்காது. நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள். பிரார்த் தனை மற்றும் தியானம் மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.

உங்கள் பணியில் ஏமாற்றத்தைக் காண்பீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை முடிப்பதற்கு கவனம் செலுத்துங்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனை தவிர்த்து நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் அதி கம். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். நிதி நிலைமை செழிப்பாக இருக்காது.

அதிக மன உளைச்சல் காரணமாக நீங்கள் சோர்வாகக் காணப்படுவீர்கள். தொடை வலியால் அவதிப்படு வீர்கள்.

